1979 ஏப்ரல் 24]

பால் பெருக்குத் திட்டங்களுக்கு மத்திய உதவி.

*வினா எண். 800— திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1978–79-ல் பால் வளத்தைப் பெருக்கவும் பால்வள நிறுவன மேம்பாட்டிற்காகவும் மத்திய அரசிடம் மாநில அரசு நிதி உதவி கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) ஆம்.

(ஆ) விவர அறிக்கை* அவையின்முன் வைக்கப்பட்டுள்ளது,

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பால்வளத்தைப் பெருக்குவதற்காக அரசு பல திட்டங்களைப் போட்டிருப்பதாக பதிலில் சொல்லப்பட்டிருக்கிறது. அரசு செய்கின்ற உதவிகள் எல்லாம் சரியான முறையில் பயன் அளிக்காமல் இருப்பதற்குக் காரணம் இந்தச் சங்கங்களில் எல்லாம் 70-ஆம் ஆண்டிலிருந்து தேர்தல் நடத்தாமல் இருப்பதுதான். இப்போதும் பழைய படியேதான் இருந்து கொண்டிருக்கிறது. பால் உற்பத்தி ஒன்றியங்களில் எல்லாம் ஸ்பெஷல் ஆபீஸர் என்கின்ற தனி அதிகாரிகள்தான் இருந்து வருகிறார்கள். இவையெல்லாம் ஜனநாயக முறையில் நடைபெறவில்லை. இதன் காரணமாக இந்தச் சங்கங்கள் எல்லாம் சீரழிந்து கிடக்கின்றன. ஆகவே, எதிர்காலத்தில் ஜனநாயக முறையில், ஸ்தாபன ரீதியாக இல்லாமல் இருப்பதால் பல கெட்ட பெயர் ஏற்படுகிறது........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரே கேள்வியை இப்படி நீட்டிக் கேட்டால் எப்படி பதில் சொல்ல முடியும்? சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: ஆகவே இந்த பால் கூட்டுறவு சங்கங்களில் எல்லாம் உடனடியாக தேர்தல்களை நடத்தி, பால் உற்பத்தி யூனியன்களில் இருக்கின்ற ஸ்பெஷல் ஆபீஸர்களை நீக்கிவிட்டு அங்கும் உரிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு அரசு உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

[* 306—311-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1979 ஏப்ரல் 24

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, பால் பெருக்கு இரண்டாவது திட்டத்தின்கீழ் 8 மாவட்டங்களில் பால் உற்பத்தி ஒன்றியங்கள் அமைக்க வேண்டும் என்று முயற்சி செய்து இப்போது 7 மாவட்டங்களில் ஒன்றியங்கள் அமைக்கப் பட்டிருக்கின்றன. மீதமுள்ள இடங்களில் இதை அமைப்பதற்காக ஃசீப்-ப்ரமோட்டர் என்று ஒருவரைப்போட்டு இதற்கான வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள். பழைய முறையிலேயே சப்ளை யூனியன்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டிருக்கிறார்கள். இந்த யூனியன்கள் தனி அதிகாரிகளின் நிர் வாகத்தில்தான் இருந்துகொண்டு வருகிறது. அதற்கெல்லாம் உரிய காலத்தில் தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப் பினர்களால் இந்த யூனியன்நடத்தப் படுவதற்கான சூழ்நிலைகள் விரைவில் ஏற்படுத்தப்படும். பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த ஒன்றியங்கள் அமைக்கப் பட்டு வருகின்றன. முன்னால் உள்ள யூனியன்கள் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறோம். பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் இப்போது ஒரு இலட்சம் லிட்டர் பால் அதிக மாக உற்பத்தி செய்கிறோம். மேலும், 3 இலட்சம் லிட்டர் பால் அதிகமாக உற்பத்தி செய்வதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருக் கிறோம். ஆகவே, உற்பத்தி எந்த விதத்திலும் பாதிக்கப்பட வில்லை. மேலும், ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தி நிர் வாகத்தை நடத்துவதற்கு அரசு ஆவன செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூரில் பால் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு கிடைக்கின்ற பாலிலிருந்து பால்கோவா தயார் செய்து வெளி மாநிலங்களுக் கெல்லாம், இந்தியா முழுவதற்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் டூப்ளிகேட் பால்கோவா தயார் செய்து விற்றுக் கொண்டும் இருக் கிறார்கள். ஆகவே, இதை அரசாங்கமே ஏற்றெடுத்து பால் கோவா தயாரித்து, வெளி மாநிலத்திற்கு அனுப்புவதற்கு ஏற் பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் தாமரைக்கனி அவர்கள் திருவில்லிபுத்தூரில் தயாரிக்கப் படுகின்ற பால்கோவா தான் சிறந்தது என்று சொல்லுகிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி சங்கரன்கோவிலில் தயாரிக்கப் படுகின்ற பால்கோவா தான் அனைத்து இந்தியாவிலேயே சிறந்த பால்கோவா என்று கருதப்பட்டு அங்கிருந்துதான் நமது பால்வள நிறுவனமும் வாங்கி விற்பனை செய்து கொண்டிருக்கிறது. திருவில்லிபுத்தூரில் தயாரிக்கப்படும் பால்கோவாதான் சிறந்தது என்றால் அதையும் பால்வள நிறுவனம் வாங்கி அனைத்திந்தியா

விலுள்ள எல்லா மாநிலங்களுக்கும், முடிந்தால் வெளிநாடு களுக்கும் பால்வள நிறுவனம் மூலமாக அனுப்ப ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை.

*வினா எண். 801—திரு. கு. ரமணி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் கழிவு நீர்வெளியே போக குழாய்கள், சாக்கடை வசதிகள் சீரழிந்து பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதை சீரமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : (அ) ஆம்.

(ஆ) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை யில் கழிவுநீர் வெளியே செல்ல தற்போது பெருமளவிற்கு சாக்கடை வசதிகள் செய்யப்பட்டு அவை நகராட்சி சாக்கடைக் குழாய்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போது நிலைமை சீரமைக்கப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, பெரிய ஆஸ்பத்திரி யாக இருக்கக்கூடிய இந்தக் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் நீண்ட பல வருடங்களாகவே பி.டபிள்யூ. டிபார்ட் மெண்ட் சார்பில் பழுது பார்க்கப்படாமல், சாக்கடை வசதி ஒழுங் காக இல்லாத காரணத்தினால், அங்கே வரக்கூடியவர்கள் சுகா தாரம் கெட்டிருக்கின்றது என்று சொல்லியும், நானும் நேரடி யாக ரிப்போர்ட் சொல்லியும் ரிப்பேர் செய்யப்படாமல் இருந்தது. அமைச்சர் அவர்கள் இப்போது ரிப்பேர் செய்யப்பட்டிருப் பதாகச் சொல்கிறார்கள். இருந்தாலும், அமைச்சர் அவர்கள் இந்த ஆஸ்பத்திரியை நேரடியாக ஒரு தரம் பார்த்து, அது இன் றைக்கும் சரியில்லை என்று சொல்வதால், இதிலே, விசேஷ கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?